ஹெக்டர்
கொப்பேகடுவ
கமநல ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி
நிறுவகம்

# கமநல
## செய்திமடல்

மலர்: 1 2017 இதழ்: 1-2 பக்கங்கள் 08 ISSN: 2579-1982



## “பேண்தகு இலங்கை” கண்காட்சி – 2017

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் எண்ணக் கருவிற்கு ஏற்ப செயற்படுத்தப்படும் நச்சுத்தன்மையற்ற நாடு எனும் மூன்று வருட கால செயற்திட்டம் மற்றும் ஐக்கிய நாடு சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைய “பேண்தகு இலங்கை” தேசிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டை நிலையான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்காக நிலைபேறான வாழ்வாதார முறைகளை அமைத்துக் கொள்வது தொடர்பில் மக்களை அறிவூட்டுதல் இக் கண்காட்சியின் நோக்கமாக அமைந்தது. (தொடர்ச்சி 2ம் பக்கத்தில்………..)



(பேண்தகு இலங்கை 1ம் பக்கத்தில்)

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் மார்ச் மாதம் 31ம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 4ம் திகதி வரை நடைபெற்ற இந்நிகழ்வை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் அங்குரார்பணம் செய்து வைத்தார். இக் கண்காட்சியினைப் பார்வையிடுவதற்காக பெருந்திரளான மக்கள் ஆர்வத்துடன் வருகை தந்திருந்தனர்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி இலக்குகளுக்கு ஏற்ப இந் நிகழ்வின் ஐந்து நாட்களும் வெவேறு தொனிப் பொருள்களுக்கு அமைய கண்காட்சிகள் நடைபெற்றன. சிறந்த வாழ்க்கைமுறை, பேண்தகு வாழ்வாதாரம், இயற்கையைப் பேணுவோம், சிறந்த அடிப்படை மற்றும் சிறந்த சமூகம் என்பன ஒவ்வொரு தினத்தினதும் தொனிப்பொருளாக அமைந்தது

அரச நிறுவனகங்ள்,அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சிறு வியாபார முயற்சியாளர்கள், சமுதாய மட்ட அமைப்புகள், கூட்டுறவு இயக்கங்கள், விவசாய அமைப்புகள், விவசாயிகள், கலைஞ்சர்கள், ஊடகவியலாளர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட அனைவரினதும் பங்களிப்புடன் பேண்தகு இலங்கை தேசிய நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

“கிராமிய நாடக மேடை“ எனும் பெயரில் கலைநிகழ்வுகள், நச்சுத்தன்மையற்ற சமையல் நிகழ்ச்சிகள், மருத்துவ சிகிச்சை நிலையங்கள், ஆய்வு அறிக்கைகளை வெளியிடுகின்ற நிகழ்வுகள், விவாதங்கள், திரைப்பட காட்சிகள், விவசாயிகளின் ஒன்று கூடல், நுகர்வோரின் முறைபாடுகளுக்கு தீர்வுகள் போன்றனவும் இதன் போது நடைபெற்றன. வெவ்வெறு அமைச்சுக்கள் மற்றும், நிறுவனங்களால் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சிக் கூடங்கள் அனைவரையும் கவரக்கூடியதாகவும் எளிய முறையில் பரந்த அறிவை பெறக்கூடியவையாகவும் காணப்பட்டன.

இவற்றில் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தின் கண்காட்சி கூடத்திற்கும் விசேட அவதானம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் எமது நிறுவனத்தின் வெளியீடுகளை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் எமது நிறுவனத்தின் ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பில் ஆர்வமுள்ளவர்களுக்கு அது சம்பந்தமான தகவல்களையும் கூடத்திலிருந்து நிறுவன ஊழியர்கள் மிகச் சிறப்பான முறையில் வழங்கி வைத்தனர்.

‘‘பேண்தகு இலங்கை’’ எனும் கண்காட்சியானது நிலைத்தகு அபிவிருத்தி துறையிலுள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் வளமானதொரு அனுபத்தை வழங்கி நிறைவுபெற்றதுடன், இந்நிகழ்வு விஷேடமாக ஐந்து நாட்களுக்கு மட்டுப்படுத்தாது நிலைத்தகு அபிவிருத்தியின் இலக்குகளை இலங்கை அடையும் வரை தொடருதல் முக்கியமானதாகும்.

# இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் பல்வேறு அரசி வகைகளின் நுகர்வு முறைகள் மற்றும் நுகர்வோர் விருப்பு

**தற்காலத்தில்** தொற்றா நோய்களின் அதிகரித்த பரவல் காரணமாக, பொதுமக்கள் ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதும் உணவு முறைமைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். இச் சூழ்நிலையில் விசேடமாக அண்மைக்காலத்தில் பல்வேறு அரசி வகைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் தன்மை நுகர்வோர் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

நுகர்வோர் பல்வேறு அரிசி வகைகளை கொள்வனவு செய்யும் இயல்பு மற்றும் விருப்பு தொடர்பில் ஆய்வு செய்யும் நோக்கில் சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை மற்றும் விவசாய வணிகப் பிரிவைச் சேர்ந்த ஆராட்சி குழுவினால் இக்கற்கை மேற்கொள்ளப்பட்டது. வெவேறு அரிசி வகைகளின் நுகர்வு முறை மற்றும் கொள்வனவு செய்யும் இயல்பு பற்றிக் கண்டறிதல் மற்றும் அரிசி வகைகளுக்கான விருப்பு தொடர்பில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை அடையாளம் காணுதல் இக்கற்கையின் குறிப்பிட்ட நோக்கங்களாக அமைந்தன.

இக் கற்கையானது கம்பஹா, கொழும்பு, மொனராகலை, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் யாழ்பாணம் ஆகிய ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த அறுநூறு நுகர்வோர் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வின் ஒருங்கிணைப்பாளராக சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ரோஷனீ ரம்புக்கவெல்ல அவர்களே செயற்பட்டதுடன் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. துமிந்த பிரியதர்ஷன மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு நாலக விஜேசூரிய ஆகியோர் சக ஆராய்ச்சியாளர்களாக செயற்ப்பட்டனர்.

இவ் ஆய்வறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் விற்பனை பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும். இவ் ஆய்வு தொடர்பில் ஆர்வமுள்ளவர்கள் சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை மற்றும் விவசாய வணிகப் பிரிவின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

# இலங்கையில் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கலப்பின விதைகளின் மூலம் மரக்கறிப் பயிர்செய்கை



**இலங்கையில்** மரக்கறிப் பயிர்ச்செய்கையில் கலப்பின விதைகள் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. விவசாயிகள் தமது பயிர்ச்செய்கைக்காக விதைகளை தெரிவு செய்யும் போது பல்வேறு வகையான காரணிகளை கருத்திற் கொள்கின்றனர். விவசாயிகளுக்கு உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளை கொள்வனவு செய்யக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதோடு, அதிக அறுவடையின் மூலம் அதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதே வணிக மட்டத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் பிரதான நோக்கமாகும்.

இக் கற்கையானது விதைகளைத் தெரிவு செய்வதில் விவசாயிகளின் விருப்பத்தை தீர்மானிக்கும் காரணிகளைப் பரிசீலனை செய்ய முனையும் அதேவேளை, உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளில் எதற்கு அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர் என்ற விடயம் தொடர்பிலும் பரிசீலனை செய்கின்றது. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு விதை வகைகளின் பயிர்செய்கையின் செலவு மற்றும் நன்மைகளை ஒப்பீடு செய்தல் இவ் ஆய்வின் இரண்டாவது குறிக்கோளாக அமைந்தது.

மேலும் இலங்கையில் மரக்கறி விதை நிரம்பல் துறையினை உறுதிப்படுத்துவதற்கான உத்திகளை முன்மொழிதல் மற்றுமொரு குறிக்கோளாக அமைந்தது. விவசாய வள முகாமைத்துவப் பிரிவின் ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. பிரசன்ன விஜேசிங்க அவர்கள் இக் கற்கையின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டதோடு, திருமதி ரசிகா விஜேசிங்க அவர்கள் சக ஆராய்ச்சி உத்தியோகத்தராக ஈடுபட்டார்.

இக்கற்கையானது இலங்கையில் கலப்பின விதைகள் மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கை என்பவற்றுடன் தொடர்புடைய பெரும்பாலான முக்கிய ஆய்வு முடிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுவதோடு, இதன் ஆய்வு அறிக்கையானது விரைவில் வெளியிடப்படும்.

# இலங்கையில் நெல் சந்தைப்படுத்தலில் அரசாங்கத்தின் தலையீடு: கொள்வனவு செய்தல் மற்றும் பிந்திய இருப்பு முகாமைத்துவம் தொடர்பிலான பிரச்சினைகள்

**நெல்** மற்றும் அரசி சந்தைப்படுத்தல் முறைமையை நிலையாகப் பேண அரசாங்கத்தின் தலையீடானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இடம் பெறுகின்றது. மேற்படி நிலைமை தொடர்பாக நெல் சந்தைப்படுத்தல் சபையானது ஒரு முக்கிய வகிபங்கினை வகிப்பதோடு, நெல்லுக்கான உறுதிப்படுத்தப்பட்ட விலையினை விதித்தல் மற்றும் நுகர்வோர் நியாயமான விலையில் அரசியினைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல் போன்றன அரசாங்கம் தலையிடுவதற்கான பிரதான நோக்கங்களாகும். இக்கற்கை சந்தைப்படுத்தல், உணவு கொள்கை மற்றும் விவசாய - வணிக பிரிவினால் மேற் கொள்ளப்பட்டதுடன் நெல் சந்தைப்படுத்தலில் அரசாங்க தலையீடு தொடர்பாக நிலைமையை மீளாய்வு செய்தல் மற்றும் தற்போதைய பிரச்சினைகளை இனங்காணல் என்பன பிரதான குறிக்கோள்களாகும்.

ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு W.A.N. விஜேசூரிய அவர்கள் இவ் ஆய்வின் இணைப்பாளர் ஆவார். சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திருமதி R.P. விதானபத்திரன, W.H.D பிரியதர்ஷன மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி P.A.J சம்பிக்கா என்போர் சக ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் ஆவார்கள். இக்கற்கையானது முற்று முழுதாக இரண்டாம் நிலை தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஆய்வறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.




## நேர்மனப்பாங்கின் ஆற்றல் தொடர்பான செயலமர்வு

**நேர்** மனப்பாங்கின் மூலம் சாத்தியமற்ற எந்தவொரு விடயத்தையும் சாத்தியமுடையதாக மாற்றலாம் என்பதை அடிப்படையாக கொண்டு HARTI நிறுவன உத்தியோகத்தர்களின் வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறன் என்பனவற்றை அதிகரிக்கும் நோக்குடன் அவர்களது நேர் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்வதற்கான விஷேட நிகழ்ச்சித் திட்டத்தினை 24ம் திகதி காலை 9.30 தொடக்கம் 12.30 வரை நிறுவனத்தின் புதிய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் ஊக்கப்படுத்தல் பயிற்சியில் பிரசித்தி பெற்ற திரு. மொஹான் பல்லியகுரு அவர்கள் இச் செயலமர்வை நடத்தி வைத்தார்.

## விவசாயத்தில் ஈடுபடும் மகளிர்களை வலுவூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்



**மனித** வள மற்றும் நிறுவன அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்களில் விவசாயத்தில் ஈடுபடும் மகளிர்களை வலுவூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது முக்கிய இடத்தைப் பெற்றுக்கொண்டது. இவ் ஆண்டில் மேற்படி தலைப்பின் கீழ் அதிக எண்ணிக்கையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எடிமலே, சியம்பலாண்டுவ, பிபிலை, தனமல்வில மற்றும் செவனகல ஆகிய பிரதேசங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களில் மொணராகலை மாவட்ட கமநல அபிவிருத்திப் பிரிவைச் சார்ந்த 540 பெண் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் இதற்காக விவசாய போதனாசிரியர்கள் மற்றும் இவ்விடயம் சார்ந்த அலுவலர்களின் உதவியும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

மே மாதம் 29ம் திகதி தொடக்கம் ஜுன் மாதம் 1ம் திகதி வரை மாத்தளை மாவட்டத்தின் அலுக்கொல்ல, தம்புளை, கலேவலை மற்றும் தேவஹுவ ஆகிய பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் கிட்டத்தட்ட 400 பெண் விவசாயிகள் பங்குப்பற்றினார்கள். இந் நிகழ்ச்சித் தொடரில் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மனித வள மற்றும் நிறுவன அபிவிருத்திப் பிரிவின் தலைவர் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகர் திரு. S.M.A. சமரகோன், சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகர்களான திரு. H.M.J.K ஹேரத், திரு. P.C.J.D சில்வா மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தரான சங்கீத் பிரசாத் பெர்ணான்டோ ஆகியோர் பங்குப்பற்றினார்கள்.

மாநாட்டுச் செய்தி




## கொள்கை வகுத்தலுக்கான அறிவியல் கலந்துரையாடல்

**உலகளாவிய** மாற்றம் மற்றும் நிலைபேறான தன்மை தொடர்பில் “இலங்கை கமநல ஆராய்ச்சி – கொள்கை – தொழினுட்பம் சார் பணியாளர்களின் ஆற்றல் விருத்தி” பற்றி மேற்கொள்ளப்பட்ட செயற்திட்ட ஆய்வு முடிவுகளைப் பரப்பும் நோக்கில் கொள்கை வகுத்தலுக்கான அறிவியல் கலந்துரையாடல் நிகழச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உலகளாவிய மாற்ற ஆய்வுக்கான ஆசிய பசுபிக் வலைப்பின்னல் (Asia Pacific Network for Global Change Research) பிரதிநிதிகள் உள்ளடங்களாக பெரும்பாலான துறைசார் நிபுணர்கள் பங்கு பற்றிய இந் நிகழ்ச்சி 2017 ஜுன் 20ம் திகதி ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் நாராயணசாமி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. விவசாய அமைச்சின் இராஜாங்க செயலாளர் திரு. D.V. பந்துசேன அவர்களின் உரையுடன் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும் இச்செயற்திட்டத்திற்கான நிதி உதவியினை உலகளாவிய மாற்ற ஆய்வுக்கான ஆசிய பசுபிக் வலைப்பின்னலினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது..

முதலாவதாக நடைப்பெற்ற தொழினுட்ப அமர்வினை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைகழகத்தின் வன மற்றும் சூழலியல் விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளாரான கலாநிதி பிராசாந்தினி குணவர்தன மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி P.M. துனுசிங்க ஆகியோர் தலைமை தாங்கினார்கள். ஆய்வு முடிவுகளை HARTI சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகர்களான திரு. S. ஏபாசிங்க மற்றும் திருமதி. சுசிலா லூர்து ஆகியோரும் ஆராய்ச்சி உத்தியோகர்களான திரு. சின்தக ஜயசூரிய, திரு. பிரசன்ன விஜேசிங்க மற்றும் திருமதி. ரசிக்கா விஜேசிங்க ஆகியோரும் முன்வைத்தார்கள். இக் கற்கையானது பிரதானமாக கரும்பு, வெங்காயம், நிலக்கடலை, பயறு மற்றும் சோளம் பயிர்செய்கை முறைகளை மையப்படுத்தியதாக அமைந்தது.இச் செயற்றிட்டம் தொடர்பான சுருக்கமான சாராம்சத்தை செயற்திட்ட தலைவர் HARTI அதி ஆராய்ச்சியாளர் திருமதி ரேணுகா வீரக்கொடி அவர்கள் முன்வைத்தார்கள். ஆய்வு முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட பின்னர் விரிவான கலந்துரையாடல் மற்றும் புதிய கருத்துக்களுக்காக விசேட நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தது. இறுதியாக செயற்றிட்டம் தொடர்பான இணையத்தளமான www.apnsustanability knowledge.com அறிமுகப்படுத்தப்பட்டது.

## விவசாயத் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான மதிப்பீடு

**விவசாயத்** திணைக்கள விவசாயத் தொழில் முயற்சிப் பிரிவு அறிமுகப்படுத்தியுள்ள கமக்காரர்களுக்கான வியாபார கற்கைப் பாடசாலை (FBS) மற்றும் ‘குருஷி சேவா பியச’ (KSP) என்பன முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களாக விளங்குகின்றன. FBS என்பது செயற்பாட்டிலிருந்து கற்கும் ஒரு கல்வி நிகழ்ச்சித்திட்டமாகும். இதன் பயனாக, புதிய தொழில்முயற்சியாளர்கள் குறித்த ஆய்வு காலப் பகுதியில் தமக்குப் பொருத்தமான தொழில்முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். மேலும் இவர்கள் தாம் கற்றுக் கொண்ட தமது தொழில்முயற்சி பற்றிய அறிவைப் பிரயோகித்துள்ளனர்.

KSP ஆனது வியாபார மையங்களாக நிறுவப்பட்டதுடன் விவசாய உள்ளீடுகள் மற்றும் தொழினுட்பங்களை வழங்குகின்றது. நிலையான மற்றும் வெற்றிகரமான விவசாய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கான அறிவு மற்றும் கொள்கை சிபாரிசுகளை மேற்கொள்வதற்காகவும் விவசாய தொழில் முயற்சி சம்பந்தமான மேற் குறிப்பிடப்பட்ட இரண்டு அபிவிருத்தி திட்டங்களை மதிப்பீடு செய்யும் நோக்கில் இக்கற்கை மேற்கொள்ளப்பட்டது.

இக் கற்கை அனுராதபுரம், பொலன்னறுவை, குருணாகல், பதுளை, மொனராகல, கண்டி, மாத்தளை, புத்தளம், கேகாலை, கம்பஹ மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுத்த மாதிரி ஒன்றினூடாக மேற்கொள்ளப்பட்டது. வியாபாரக் கற்கைப் பாடசாலைகளிலுள்ள 120 விவசாயத் தொழில் முயற்சியாளர்களில், 74 விவசாயத் தொழில் முயற்சியாளர்கள் இந்தக் கற்கைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பத்து (10) KSPகள் ஆய்வு செய்யப்பட்டதுடன், அதி ஆராய்ச்சியாளர் திரு ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸ அவர்கள் இக் கற்கையின் ஒருங்கிணைப்பாளர் ஆவார். இவ்ஆராய்ச்சியின் ஆய்வறிக்கையானது விற்பனை பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும்.



# விவசாய அமைப்புக்களை வலுவூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

**விவசாய** அமைப்புத் தலைவர்களை வலுவூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மொணராகலை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றன. இந் நிகழ்ச்சி மாத்தளை மாவட்டத்தில் ஏழு விவசாய அபிவிருத்தி பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் அலுகொல்ல, தம்புள்ள, கலேவல, தேவஹுவ, லக்கல, ஹுனுகடஅல மற்றும் பல்லேபொல ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றன. மொனராகலை மாவட்டத்தில் புத்தள, தம்பகல்ல, அலுத்வெவ மற்றும் மெதகம ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் கிட்டத்தட்ட 360 விவசாய அமைப்புக்களின் தலைவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. மனிதவள மற்றும் நிறுவக அபிவிருத்திப் பிரிவின் தலைவர் திரு S.M.A. சமரகோன் மற்றும் H.M.J.K ஹேரத் ஆகியோர் இந் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தனர்.

**விவசாய** ரீதியான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரிய மரபுரிமை முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு இலங்கை உட்பட 7 நாடுகளின் பங்குப்பற்றலுடன் 2017 ஜுன் 7ம் திகதி தொடக்கம் ஜுன் 27 வரை சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெற்றது. இக் கருத்தரங்கிற்கு நிறுவகத்தை பிரதிநிதிப்படுத்தும் முகமாக 10 சிரேஷ்ட ஊழியர்கள் பங்குப்பற்றினார்கள்.




## HARTI அதிகாரிகளின் சீனா கருத்தரங்குப் பயணம்

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவக நலன்புரி சங்கத்தினால் ஒழுங்குச்செய்யப்பட்ட தமிழ் சிங்கள புதுவருட கொண்டாட்டம் 2017 ஏப்ரல் 25ம் திகதி நிறுவன வளாகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கல்விசார், மற்றும் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பங்குபற்றினார்கள். பாரம்பரிய புத்தாண்டு விளையாட்டு போட்டி நிகழ்வுகள் பல நடைபெற்றன. இப் போட்டிகளில் பலரும் ஆர்வத்துடன் பங்குபற்றியதைக் காணக்கூடியதாக இருந்தது. இந் நிகழ்வு பரிசளிப்பு வைபவத்துடன் இனிதே நிறைவுபெற்றது.



## புதுவருட விளையாட்டுப் போட்டிகள் - 2017



## சர்வேதச வெசாக் தின வைபவம்

**பௌத்தாலோக** வெசாக் வலயத்துடன் ஒருங்கிணைந்து ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகமும் வெசாக் பண்டிகையை கொண்டாடும் முகமாக நலன்புரி சங்கம் மற்றும் HARTI உத்தியோகத்தர்களின் கூட்டு முயற்சியுடன் கடலை அன்னதான நிகழ்வு மற்றும் வெசாக் கூடுப்போட்டி ஏற்பாடு செய்யத்திருந்தது.



## வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் மற்றும் நன்கொடைகள்

**வெள்ள** அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் பொருட்டு ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தால் இரு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. முதலாவதாக கடுவெல பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை விமான படையின் உதவியுடன் 500 பகல் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மற்றைய நிகழ்ச்சியில் நிறுவனத்தினுள் பாதிக்கப்பட்ட 14 ஊழியர்களுக்கு நலன்புரிச் சங்கம் மற்றும் பொது ஊழியர் சங்கம் ஒன்றிணைந்து உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

# புதிய வெளியீடுகள்

கமநலம் சஞ்சிகை
(2017 மலர் 33 இதழ் 1-2)

கொவி ஜனதா சஞ்சிகை
(சிங்கள மொழி)

தாழ்நாட்டு ஈரவலய வயல்களை இயலுமைக்கேற்ப நெற் பயிர்சசெய்கைக்காக வகைப்படுத்தல்
(சிங்கள மொழி)

Present Status and Future Prospects of Non-Farm Employment (NFE) in the Mahaweli Area

An Evaluation of Mobile Based Market Information Systems in Sri Lanka

Adoption and Soil Conservation Measures: Case of Upper Watershed Management Project (UWMP)

Present Situation and Prospects of Cinnamon Industry in Sri Lanka























## *கமநல செய்திமடல்*

**வெளியீடு**

ஹெக்டர் கொப்பேகடுவ
கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்,
114, விஜேராம மாவத்தை,
கொழும்பு 07.

***தொகுப்பாளர் மற்றும் தலைமை பதிப்பாசிரியர்***
*ச. ஜோசப் பிராண்சிஸ்*
*(தகவல் மற்றும் வெளியீட்டு உத்தியோகத்தர்)*

***உதவிப் பதிப்பாசிரியர்***
நிபானா புஹாரி
(ஆராய்ச்சி உத்தியோகத்தர்)

**நிர்மாணிப்பாளர்:**
உதேனி கருனாரட்ண

*கமநல செய்திமடல்*
***ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் தகவல் மற்றும் வெளியீட்டு பிரிவு***

**அச்சகம்: ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவக அச்சகம்**